Adda247 GET IT ON Google Play

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________
   (Name) ____________________
2. (Signature) ____________________
   (Name) ____________________

**Answer Sheet No. :** ................................................
(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | |
(In figures as per admission card)

**Roll No.** ____________________
(In words)

**Test Booklet No.**

**J—2607**

**PAPER—II**

# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the question booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Serial No. of the booklet should be entered in the Answer-sheets and the Serial No. of Answer Sheet should be entered on this Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.

   **Example :** (A) (B) ● (D)

   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the Answer Sheet given **inside the Paper I booklet only**. If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is NO negative marking.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या उत्तर-पत्रक पर अंकित करें और उत्तर-पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं। आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** (A) (B) ● (D)

   जबकि (C) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये** उत्तर-पत्रक पर ही अंकित करने हैं। यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते है, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे।
9. आपको परीक्षा समाप्त होने पर उत्तर-पुस्तिका निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तर के लिए अंक नहीं काटे जायेंगे।**

# Test Prime

## ALL EXAMS, ONE SUBSCRIPTION

**70,000+** Mock Tests

Personalised Report Card

Unlimited Re-Attempt

**600+** Exam Covered

Previous Year Papers

**500%** Refund

IBPS

NABARD

INDIAN RAILWAYS

ATTEMPT FREE MOCK NOW

Adda247 GET IT ON Google Play

# TAMIL

## PAPER – II

**Note:** **This paper contains fifty (50) multiple-choice questions, each question carrying two (2) marks. Attempt all the questions.**

**குறிப்பு :** இந்த வினாத்தாளில் ஐம்பது (50) விடை தெரி வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் இரண்டு (2) மதிப்பெண்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** சார்பெழுத்தின் வகை

(A) நான்கு

(B) எட்டு

(C) ஆறு

(D) பத்து

**2.** "யாயும் ஞாயும் யாராகி யரோ" - இவ்வடி இடம் பெறும் நூல்.

(A) கலித்தொகை

(B) குறுந்தொகை

(C) புறநானூறு

(D) அகநானூறு

**3.** சங்க இலக்கியத்தில் நீண்ட பக்திப்பாடலாக அமைந்த நூல்.

(A) திருமுருகாற்றுப் படை

(B) மலைபடு கடாம்

(C) பட்டினப்பாலை

(D) மதுரைக்காஞ்சி

**4.** திருக்குறள் அறத்துப்பால் பிரிவில் இடம்பெற்ற குறள்கள் எண்ணிக்கை.

(A) **250**

(B) **420**

(C) **380**

(D) **330**

5. "நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்" - இவ்வடி இடம்பெறும் காப்பியம்.
   (A) மணிமேகலை
   (B) சீவகசிந்தாமணி
   (C) கம்பராமாயணம்
   (D) சிலப்பதிகாரம்

6. கொல்லாமையை வலியுறுத்தும் சிறுகாப்பியம்.
   (A) யசோதர காவியம்
   (B) நாககுமார காவியம்
   (C) உதயணகுமார காவியம்
   (D) நீலகேசி

7. 'உரியியல்' இடம் பெறும் அதிகாரம்
   (A) பொருளதிகாரம்
   (B) சொல்லதிகாரம்
   (C) எழுத்ததிகாரம்
   (D) யாப்பதிகாரம்

8. 'வட்டப்பலகை' என்பது
   (A) உவமத் தொகை
   (B) வினைத் தொகை
   (C) பண்புத் தொகை
   (D) வேற்றுமைத் தொகை

9. பெரிய புராணம் என்பது
   (A) பத்தாம் திருமுறை
   (B) பன்னிரண்டாம் திருமுறை
   (C) பதினோராம் திருமுறை
   (D) எட்டாம் திருமுறை

10. அண்ணம் நுனிநா வருட
   (A) ரழ வரும்
   (B) யவ வரும்
   (C) கச வரும்
   (D) ஙஞ வரும்

Adda247 GET IT ON Google Play

11. ‘பெத்லகேம் குறவஞ்சி’ பாடியவர்

(A) வேதநாயகம் பிள்ளை

(B) கிருஷ்ணப் பிள்ளை

(C) வேதநாயக சாஸ்திரி

(D) வீரமா முனிவர்

12. “அம்மையே அப்பா ஒப்பிலா மணியே” - எனப் பாடியவர்

(A) மாணிக்கவாசகர்

(B) சுந்தரர்

(C) திருஞானசம்பந்தர்

(D) திருநாவுக்கரசர்

13. சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற மு. மேத்தாவின் நூல்

(A) கண்ணீர்ப்பூக்கள்

(B) ஆகாயத்திற்கு அடுத்த வீடு

(C) அவர்கள் வருகிறார்கள்

(D) சோழ நிலா

14. ‘புதிய நந்தன்’ எனும் சிறுகதையை எழுதியவர்

(A) புதுமைப்பித்தன்

(B) ஜெயகாந்தன்

(C) கு. ப. இராஜகோபாலன்

(D) இந்திரா பார்த்தசாரதி

15. ‘நாற்காலிக்காரர்’ எனும் நவீன நாடகம் படைத்தவர்

(A) மு. இராமசாமி

(B) பிரபஞ்சன்

(C) ந. முத்துசாமி

(D) சே. இராமானுசம்

**16.** வண்ணச் சினைச் சொல்லில் இடம் பெறுபவை

(1) அடை

(2) சினை

(3) முதல்

(4) இறுதி

இவற்றுள் :

(A) 1, 2 சரி

(B) 1, 2, 3 சரி

(C) 1, 3 சரி

(D) நான்குமே சரி

**17.** உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது

(1) தீவகம் ஆகும்

(2) உருவகம் ஆகும்

(3) தற்குறிப்பேற்றம் ஆகும்

(4) இல்பொருள் உவமை ஆகும்

இவற்றுள்:

(A) 1,3 சரி

(B) 3,4 சரி

(C) 2 மட்டும் சரி

(D) 2,3 சரி

**18.** கல்கி எழுதிய வரலாற்று நாவல்கள்

(1) பார்த்திபன் கனவு

(2) சிவகாமியின் சபதம்

(3) பொன்னியின் செல்வன்

(4) அமரதாரா

இவற்றுள்:

(A) 1, 2 சரி

(B) 1, 3 சரி

(C) 1, 2, 3 சரி

(D) 3, 4 சரி

Adda247 GET IT ON Google Play

**19.** எட்டுத் தொகையில் அடங்கும் அகம் பற்றிய நூல்கள்

(1) நற்றிணை

(2) குறுந்தொகை

(3) பதிற்றுப்பத்து

(4) பரிபாடல்

இவற்றுள்:

(A) 1,2 சரி

(B) 2,3 சரி

(C) 3,4 சரி

(D) 4,1 சரி

**20.** நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

(1) கட்டபொம்மன் கதை

(2) மதுரை வீரன் கதை

(3) தேசிங்குராஜன் கதை

(4) விக்கிரமாதித்தன் கதை

இவற்றுள்:

(A) 1,2 சரி

(B) 2,3 சரி

(C) 1,2,3 சரி

(D) அனைத்துமே சரி

**21.** **உறுதிக் கூற்று :** திருக்குறள் ஓர் உலகப் பொதுமறை நூல்

**காரணம் :** அனைத்துச் சமயத்தவர்க்கும் ஏற்புடைய கருத்துக்களைக் கொண்டிருத்தலால்.

(A) **உ. கூ.** + **கா.** இரண்டும் சரி

(B) **உ. கூ.** சரி; **கா.** சரியன்று

(C) **கா.** சரி; **உ. கூ.** சரியன்று

(D) **உ. கூ.** + **கா.** இரண்டும் சரியல்ல

Adda247
GET IT ON Google Play

22. **உறுதிக்கூற்று** : "திருவாசகத்துக்கு உருகார்
ஒருவாசகத்துக்கும் உருகார்"

**காரணம்** : சிவனை மட்டுமே பாடுவதால்.

(A) **உ. கூ.** + **கா.** இரண்டும் சரி

(B) **உ. கூ.** சரி; **கா.** சரியன்று

(C) **உ. கூ.** + **கா.** இரண்டும் சரியல்ல

(D) **கா.** சரி; **உ. கூ.** சரியன்று

23. **உறுதிக்கூற்று** : சங்க இலக்கியம் ஒரு செவ்வியல் இலக்கியம்.

**காரணம்** : தொன்மையும் உயர்கவிதைச் சிறப்பும் கொண்டிருத்தலால்.

(A) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரி

(B) **உ, கூ,** சரி; **கா,** சரியன்று

(C) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரியல்ல

(D) **கா,** சரி ; **உ. கூ,** சரியன்று

24. **உறுதிக் கூற்று** : சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ்க் காப்பியம்.

**காரணம்** : அறம், பொருள், இன்பம் பாடியதால்

(A) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரி

(B) **உ, கூ,** சரி, **கா,** சரியன்று

(C) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரியல்ல

(D) **கா,** சரி; **உ, கூ,** சரியன்று

25. **உறுதிக்கூற்று** : 'தோழி அறத்தொடு நிற்றல்', என்பது ஓர் அகப்பொருள்துறை.

**காரணம்** : தோழி, களவு ஒழுக்கத்தைக் கற்பு நெறிக்கு மேம்படுத்துதலால்.

(A) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரி

(B) **உ, கூ,** சரி; **கா,** சரியன்று

(C) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரியல்ல

(D) **கா,** சரி; **உ, கூ.** சரியன்று

Adda247 GET IT ON Google Play

26. **உறுதிக்கூற்று** : நச்சினார்க்கினியர்; 'உச்சிமேற்புலவர்' எனப் போற்றப்பட்டார்.

**காரணம்** : அவர், உச்சி மீது நின்று, புலவர்களைப் பாடியதால்

(A) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரி

(B) **உ, கூ,** சரி; **கா,** சரியன்று

(C) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரியல்ல

(D) **கா,** சரி; **உ. கூ.** சரியன்று

27. **உறுதிக்கூற்று** : ஈ, தா, கொடு எனக் கிளக்கும் மூன்றும் இரவின் கிளவியாகும்.

**காரணம்** : ஒருவன் தன்னொத்த ஒருவனிடம் இரத்தற்கண் வரும் சொற்கள் ஆதலால்

(A) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரி

(B) **உ, கூ,** சரி; **கா,** சரியன்று

(C) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரியல்ல

(D) **கா,** சரி; **உ, கூ,** சரியன்று

28. **உறுதிக்கூற்று** : பாடாண் திணை புறத்திணைகளுள் ஒன்று

**காரணம்** : மன்னனின் வீரம், கொடை, அருளுள்ளம் முதலியனவற்றைப் போற்றிப் பாடுவதால்

(A) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரி

(B) **உ, கூ,** சரி; **கா,** சரியன்று

(C) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரியல்ல

(D) **கா,** சரி; **உ, கூ,** சரியன்று

29. **உறுதிக்கூற்று** : குறிஞ்சிப்பாட்டு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

**காரணம்** : குறிஞ்சிப் பூக்கள் பற்றிப் பாடியிருப்பதால்

(A) **உ, கூ,** சரி; **கா,** சரியன்று

(B) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரி

(C) **உ, கூ,** சரியன்று; **கா,** சரி

(D) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரியல்ல

**30.** **உறுதிக்கூற்று :** குழந்தை உறங்கப் பாடப்பெறுவது ‘தாலாட்டு’ ஆகும்

**காரணம் :** நாவை ஆட்டிப் பாடுவதால்

(A) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரி

(B) **உ, கூ,** சரி; **கா,** சரியன்று

(C) **உ, கூ,** + **கா,** இரண்டும் சரியல்ல

(D) **கா,** சரி; **உ, கூ,** சரியன்று

**31.** நிரல்படுத்துக : நாற்பொருள்கள்

(A) பொருள், இன்பம், அறம், வீடு

(B) அறம், பொருள், இன்பம், வீடு

(C) வீடு, அறம், பொருள், இன்பம்

(D) அறம், இன்பம், பொருள், வீடு

**32.** நிரல்படுத்துக : நால்வகை நிலங்கள்

(A) முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்

(B) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

(C) நெய்தல், மருதம், குறிஞ்சி, முல்லை

(D) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

**33.** நிரல்படுத்துக : செய்யுள் செய்தற்குறிய சொற்கள்

(A) இயற்சொல், வடசொல், திசைச்சொல், திரிசொல்

(B) திசைச்சொல், வடசொல், இயற்சொல், திரிசொல்

(C) இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்

(D) வடசொல், திசைச்சொல், இயற்சொல், திரிசொல்

**34.** நிரல்படுத்துக : தொல்காப்பியர் கூறும் குடிவகை

(A) அந்தணர், அரசர், வேளாளர், வணிகர்

(B) அரசர், அந்தணர், வேளாளர், வணிகர்

(C) அரசர், அந்தணர், வணிகர், வேளாளர்

(D) அந்தணர், வணிகர், வேளாளர், அரசர்

**35.** நிரல்படுத்துக : தொல்காப்பியர் கூறும் குடிவகை

(A) இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம்

(B) இடந்தலைப்பாடு, இயற்கைப் புணர்ச்சி, தோழியிற் கூட்டம், பாங்கற் கூட்டம்

(C) தோழியிற் கூட்டம், இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம்

(D) பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம், இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு

**36.** நிரல்படுத்துக : யாப்பு உறுப்புகள்

(A) எழுத்து, சீர், அடி, தொடை, தளை, அசை

(B) அடி, தொடை, தளை, சீர், அசை, எழுத்து

(C) எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை,

(D) அடி, தளை, அசை, சீர், எழுத்து, தொடை

**37.** நிரல்படுத்துக : சைவ நெறி

(A) பசு, பாசம், பதி

(B) பாசம், பசு, பதி

(C) பதி, பாசம், பசு

(D) பதி, பசு, பாசம்

**38.** நிரல்படுத்துக : பெண் பருவங்கள்

(A) பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்

(B) பெதும்பை, பேதை, அரிவை, தெரிவை, மங்கை, மடந்தை, பேரிளம்பெண்

(C) அரிவை, தெரிவை, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, பேரிளம்பெண்

(D) மங்கை, மடந்தை, பெதும்பை, பேதை, தெரிவை, அரிவை, பேரிளம்பெண்

**39.** நிரல் படுத்துக : அறுவகைச் சிறுபொழுதுகள்

(A) வைகறை, காலை, நண்பகல், மாலை, எற்பாடு, யாமம்

(B) வைகறை, எற்பாடு, காலை, நண்பகல், மாலை, யாமம்

(C) வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம்

(D) காலை, நண்பகல், மாலை, எற்பாடு, யாமம், வைகறை

**40.** நிரல்படுத்துக : மொழியியல் கூறுகள்

(A) ஒலியியல், ஒலியனியல், உருபனியல், தொடரியல்

(B) ஒலியனியல், உருபனியல், தொடரியல், ஒலியியல்

(C) தொடரியல், உருபனியல், ஒலியியல், ஒலியனியல்

(D) உருபனியல், ஒலியனியல், ஒலியியல், தொடரியல்

41. பொருத்துக :

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | தமிழ்த்தாத்தா | - | 1. | திருநாவுக்கரசர் |
| (b) | திராவிட சிசு | - | 2. | ரா. பி. சேதுப்பிள்ளை |
| (c) | தாண்டக வேந்தர் | - | 3. | திருஞானசம்பந்தர் |
| (d) | சொல்லின் செல்வர் | - | 4. | உ. வே. சாமிநாதையர் |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

42. பொருத்துக :

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | குடிலன் | - | 1. | சிலப்பதிகாரம் |
| (b) | ஆயனச் சிற்பி | - | 2. | மனோன் மணீயம் |
| (c) | மாடல மறையோன் | - | 3. | மணிமேகலை |
| (d) | உதய குமாரன் | - | 4. | சிவகாமியின் சபதம் |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

43. பொருத்துக :

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | பால்வீதி | - | 1. | வைரமுத்து |
| (b) | சூரிய நிழல் | - | 2. | பாலா |
| (c) | இன்னொரு தேசீயகீதம் | - | 3. | சிற்பி |
| (d) | திண்ணைகளும் வரவேற்பறையும் | - | 4. | அப்துல் ரகுமான் |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

Adda247 GET IT ON Google Play

**44.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அகவலோசை | - | 1. கலிப்பா |
| (b) | துள்ளலோசை | - | 2. வெண்பா |
| (c) | தூங்கலோசை | - | 3. ஆசிரியப்பா |
| (d) | செப்பலோசை | - | 4. வஞ்சிப்பா |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

**45.** பொருத்துக :

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | யாதும் ஊரே யாவரும் கேளிர் | - | 1. | நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை |
| (b) | கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது | - | 2. | பாரதிதாசன் |
| (c) | கொலை வாளினை எடடா | - | 3. | பாரதியார் |
| (d) | நெஞ்சு பொறுக்குதிலையே | - | 4. | கணியன் பூங்குன்றனார் |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

**கீழ்வரும் கட்டுரைப் பகுதியைப் படித்து, அதன்கீழே இடம் பெற்றுள்ள விளாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.**

தமிழ்நாட்டு மருத்துவம் பச்சிலைகளையும் வேர்களையும் பெரிதும் அடிப்படையாகக் கொண்டது. சித்தர்கள் என்னும் யோக நெறி அறிஞர்களே மருத்துவ நெறிகளை வருத்தனர். பதினெட்டுச் சித்தர்களைத் தமிழகம் அறியும். இவர்களின் பெயரால் பல மருத்துவ நூல்கள் காணப்படுகின்றன. இச்சான்றோர்கள் கண்டறிந்த மூலிகைகளை அவ்வவற்றிற்குரிய மருத்துவப் பண்புகள் அடிப்படையில் பெயரிட்டழைத்தனர். வாதமடக்கி, வண்டு கொல்லி, கிரந்தி நாயகன், பொன்னாங்கண்ணி என்பவை இதற்குச் சான்றுகளாகும். மஞ்சள் காமாலைக்குத் தமிழ்நாட்டுக் கீழ்க்காய் நெல்லியே கைகண்ட மருந்தாக இன்றும் கருதப்படுகின்றது. சித்த மருத்துவம் தமிழர்க்கே உரிய அரும்பெருஞ் செல்வமாகும். சித்தர் மருத்துவத்தில் கழாயம் (கஷாயம்), குளிகை, சூரணம், இலேகியம், செந்தூரம் என்னும் பல மருந்துகள் உண்டு. இம்மருந்துகள் எளிமையானவை; பழமையானவை; தமிழ்நாட்டுத் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றவை, இவற்றின் நோக்கம் தடுப்பு, தீர்வு, ஆற்றல் மீட்பு, ஆயுள் நீட்சி என்னும் நான்கு என்பர்.

மருத்துவத் துறையின் தலைவராகச் சிவபெருமானே கொள்ளப் படுகிறார். அவரே ஏழு லட்சம் பாடல் கொண்ட நூலை இயற்றியதாக நம்புவர். நந்தி, சனகர், சனாதர், சனானந்தர், சனற் குமாரர், திருமூலர், பதஞ்சலி, அகத்தியர், புலத்தியர், புசுண்டர், கருவூரார், தன்வந்திரி, சட்டைமுனி, தேரையர், யூகிமுனி ஆகியோர் பல மருத்துவ நூல்களை இயற்றினர் என்பர்.

மருந்துவ நூல்கள் இரசமணி, மந்திரம், மருந்து, என்னும் மூன்றனைக் கூறுகின்றன. உப்பு, தீ, நீர், பட்டினி, உடற்பொருள், பாசாணம், உலோகம், சத்து, இரசக் குளிகை, யோகம் என்னும் பத்து முறைகள் சொல்லப் படுகின்றன. மந்திரம் யோகத்திலும், மணி குளிகையிலும் அடங்கும். மூலிகைச் சூரணம், இலேகியம், மெழுகு என்னும் இவற்றைக் குறிக்கும். இவற்றுக்கு 'மக்களுறை' என்னும் பெயருண்டு. கட்டிகளுக்குத் தைலங்களும், சாராயத்தில் ஊறிய பிற மருந்துகளும் உண்டு. செந்தூரம், சுண்ணம், செய்நீர், தீ, நீர், சத்து, மணி முதலியன பஸ்பம் எனப்படும். இம்முறைகள் சித்தர் மருத்துவத்தில் மட்டுமே உண்டு.

உப்புக்கள் 25, பாசாணம் 64, உலோகம் 9, உலோகச் சத்துகள் 120, மூலிகைகள் 1008 என்று நூல்கள் கூறுகின்றன. நாடியைப் பிடித்துப் பார்த்து நோயை அறிவது சித்தர் முறையாகும். இடகலை, பிங்கலை, சுழுமுனை என நாடிகள் மூவகையாம். வாதம், பித்தம், கோழை (கபம்) எனும் மூன்றின் நிலைகளும் நாடியின் வழி கண்டறியப்படும். அடுத்து, கண்ணின் நிறம், நாவின் தன்மை, உடல், மலம், சிறுநீர், சத்தம் ஆகியனவற்றையும் கண்டறிவர். மருந்தினால் மட்டுமின்றி, பார்வை, நீரோதிக்கொடுத்தல், மந்திரம் செபித்தல் என்ற பிற முறைகள் மூலமும் நோய்கள் தீர்க்கப்படும். இன்றும்கூட 'மந்திரம்' என்னும் முறை வழி தேள்கடி, பாம்புக்கடி விஷங்கள் முறிக்கப் படுகின்றன.

**46.** மஞ்சள் காமாலைக்குக் கைகண்ட மருந்து

(A) குளிகை

(B) சூரணம்

(C) இலேகியம்

(D) கீழ்க்காய் நெல்லி

**47.** **உறுதிக்கூற்று :** சித்த மருத்துவம் தமிழர்க்கே உரிய அரும் பெருஞ் செல்வமாகும்.

**காரணம் :** தமிழ்நாட்டுத் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றது

(A) உ, கூ, + கா, இரண்டும் சரி

(B) உ, கூ, சரி; கா, சரியன்று

(C) உ, கூ, + கா, இரண்டும் சரியல்ல

(D) உ, கூ, சரியன்று; கா, சரி

**48.** நிரல் படுத்துக : உடல் தன்மை வகை

(A) கோழை (கபம்), வாதம், பித்தம்

(B) பித்தம், வாதம், கோழை (கபம்)

(C) வாதம், கோழை (கபம்), பித்தம்

(D) வாதம், பித்தம், கோழை (கபம்)

**49.** பொருததும் :

(a) பஸ்பம் - 1. பிங்கலை

(b) நாடி - 2. விஷம் தீர்த்தல்

(c) சித்தர் - 3. சிந்தூரம்

(d) மந்திரம் - 4. தன்வந்திரி

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

**50.** சித்தர் மருத்துவம் மிகச்சிறந்த மருந்துவம்

(1) உடம்பைச் செம்மையாகப் போற்றுதல் குறித்து வற்புறுத்துகிறது.

(2) ஆயுள் நீட்சிக்கு வழிமுறைப் படுத்துகிறது.

(3) மருத்துவத் துறையின் தலைவராகச் சிவபெருமான் விளங்குகிறார்.

(4) பஸ்பம் எனப்படும் மருந்து இம்மருத்துவத்தில் மட்டுமே உண்டு.

(A) 1 மட்டும் சரி

(B) 1, 2 சரி

(C) 1, 2, 4 சரி

(D) அனைத்தும் சரி

- o O o -

Space For Rough Work